

திரு மா. திருநாவுக்கரசு

சித்தியவான், மலேசியா

**திரு மா. திருநாவுக்கரசு**

அவர்கள் தொகுத்த

# அருணகிரிநாதர் ஆய்வுக் களஞ்சியம்



திரு அருணகிரிநாதர்



## அருணகிரியார் வாக்கில் அரனடியார்கள்

*முனைவர் பழ. முத்தப்பன்*

*முதல்வர், செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி,*

*திருச்சிராப்பள்ளி - 9 - தமிழ்நாடு*

சந்தப்பாவின் சொந்தக்காரர் அருணகிரியார் அருளிய திருப்புகழ் சமய வரலாற்றில் தனியிடம் பெற்றதாகும். அருணகிரியார் முன்னோர் மொழியைப் பொன்னனெனப் போற்றும் மேன்மையர் ஆவார். தம் காலத்திற்கு முன்னர் வாழ்ந்த திருமுறை அருளாளர்களை எஞ்ஞான்றும் மறவாதவர் ஆவார். தாம் பாடியருளிய திருப்புகழ் உள்ளிட்ட நூல்களில் அரனடியார்கள் அருளிய திருமுறைகளின் சாயல்களைப் பதிவு செய்த பண்பாளர் ஆவார். அரனடியார்களைப் போலவே அறுமுக வேளின் அடியாராகிய அருணகிரியார் தம் அநுபவங்களைத் தம் கவிதைகளில் இடம்பெற வைத்துள்ளார். அதனை நினைவு கூர்வது இக்கட்டுரையாகும்.

அரனடியார்கள் எவ்வாறு மற்றை அடியார்களைப் போற்றிப் பரவினார்களோ அதுபோலவே அருணகிரியாரும் அடியார்களைப் போற்றிப் பரவியுள்ளார். குறிப்பாகச் சொன்னால் அடியார்களோடு கூடி வாழ்வதே நற்கதியைத் தரும் என்று நம்பியவர் அருணகிரியார். எனவேதான் கந்தர் அலங்காரத்தில்,

"சூரில் கிரியில் கதிர்வேல் எறிந்தவன் தொண்டர்குழாம்

சாரில் கதி அன்றி வேறில்லை காண்" *(பா. 49)*

என்று குறிப்பிடுகிறார். அடியார்கள் கூட்டத்தோடு சேர்ந்து வாழ்வதுதான் ஊனமில்லாத வாழ்வு என்று அனுபவத்தில் கண்ட அருணகிரியார் முருகனிடம் வேண்டும் பொழுது மணிவாசகரைப் போலவே வேண்டுகிறார். "அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரிவாய்" என்று மணிவாசகர் வேண்டுவதைப் போல் அருணகிரியாரும் திருப்புகழில்,

" ...... வினையேனும்

உரையையும் அறிவையும் உயிரையும் உணர்வையும்

உன்பாத கஞ்ச ...... மலர்மீதே

உறவோடு புனைதர நினைதொழும் அடியாரோடு

ஒன்றாக என்று ...... பெறுவேனோ"

*(கரையற வுருகுதல் - திருச்செங்கோடு திருப்புகழ்))*

என்று பாடிப்பரவி முருகனிடம் வேண்டுகோள் விடுக்கிறார். அடியவர் கூட்டத்தோடு வாழ்வது மட்டும் அல்லாது அவர்களின் ஏவலுக்குத் தொண்டு செய்யும் நற்பேற்றினையும் தனக்கு முருகன் தரவேண்டும் என்று வேண்டுகின்ற பாங்கினையும் அவரிடம் காணமுடிகிறது. அதிலும் உடல்நலம் வளமாக இருக்கும் பொழுதே அடியவர்களுக்குத் தொண்டு செய்யும் பேறு கிடைக்கவேண்டும் என்று ஏங்கி வேண்டுவது குறிப்பிடத் தக்கதாகும்.

"உறக்கம் வருமளவில் எலும்பு
குலுக்கி விடும் இருமல் தொடங்கி
உரத்தகுரை குரலும் நெறித்து ...... தடிகாலாய்
உரத்தநடை தளரும் உடம்பு பழுத்திடுமுன் மிகவும் விரும்பி
உனக்கு அடிமைபடும் அவர் தொண்டு ...... புரிவேனோ!"

*(கறுத்ததலை வெளிறு - திருவேங்கடம் திருப்புகழ்)*

என்பது அவரின் வேண்டுகோள் வாக்காகும். இவ்வாறு இறையடியார்கள் கூட்டத்தோடு தான் ஒருவனாக வேண்டும் என்றும், அவர்களின் ஏவல் கூவலுக்கு உரியவனாக வேண்டும் என்றும் அருணகிரியார் பாடிப் போற்றி அடியவர்கள் தம் பெருமையை உணரவைக்கின்றார். அடியவர்கள் அருளிச் செய்த கவிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அருணகிரியார் அவர்கள் கவிச்சுவையை தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார். திருமுறையாளர்களின் கவிதைப் பண்பு அருணகிரியாரின் கவிதைகளில் மிளிர்வதைக் காண முடிகிறது. எடுத்துக் காட்டிற்கு ஒன்றிரண்டு காண்பது வேண்டுவதாகும். சந்தப் பாவிற்கு முன்னோடியாகத் திகழ்ந்த திருஞானசம்பந்தரைப் போல அருணகிரியாரும் இறைவனின் அருள் இருக்குமானால் நாளும் கோளும் நமை வந்து நலியாது என்ற கருத்தை வலியுறுத்துகிறார். திருஞானசம்பந்தரின் கோளறுபதிகத் தாக்கந்தான் அருணகிரியாரின் "நாள் என் செய்யும் வினைதான் என் செய்யும், எனை நாடிவந்த கோள் என் செய்யும்" என்ற கந்தர் அலங்காரப் பாடலாக மிளிர்கிறது எனலாம்.

அதுபோல வாகீசப் பெருந்தகையம் திருநாவுக்கரசரின் மனத் திண்மையை அருணகிரியாரிடம் காணமுடிகிறது. நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்பது திருநாவுக்கரசரின் மனத் திண்மையைக் காட்டும் தொடராகும். இச்சாயலை அருணகிரியாரின்,

"மரணப் ரமாதம் நமக்கு இல்லையாம் என்று வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும் உண்டே" *(பா. 21)*

என்ற கந்தர் அலங்காரப் பாடலில் காண முடிகிறது. மேலும் தம்பிரான் தோழராம் நம்பியாரூரின் தோழமை உரிமையை அருணகிரியாரிடத்திலும் காணமுடிகிறது.

"மற்றகைகண் தாராது ஒழிந்தால் வாழ்ந்து போதீரே"

என்ற சுந்தரரின் மணிவார்த்தையின் சாயலே அருணகிரியாரின்,

"பாழ் வாழ்வெனும் இப்படு மாயையிலே
வீழ்வாய்என என்னை விதித்த தனையே
தாழ்வானவை செய்தனதாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில் வாகனனே" *(பா. 31)*

என்ற கந்தர் அநுபூதிப் பாடலில் காணமுடிகிறது. அழுது அழுது அரனடி அடைந்த மணிவாசகரின் தன்னிரக்கத் தன்மை அருணகிரியாரிடத்திலும் பிரதிபலிக்கிறது. "ஆமாறு உன் திருவடிக்கே அகங்குழையேன், அன்புருகேன், பூமாலை புனைந்தேத்தேன், புகழ்ந்துரையேன்." என்று மணிவாசகர் தன்னிரக்கமாகப் பாடும் சயலை, அருணகிரியாரின் "உனைத் தினத் தொழுதிலன் உனது இயல்பினை உரைத்திலன் பலமலர் கொண்டு உன் அடியினை உறப் பணிந்திலேன்" என்ற தன்னிரக்கத்தைத் திருப்புகழில் காணமுடிகிறது. இவ்வாறு அருணகிரிப் பெருமான் தனக்கு முன்னே வாழ்ந்த

அருளாளர்களின் கவிதைகளில் ஒன்றுபட்ட காரணத்தால் அவர்களின் பாவடிவங்களைத் தம் திருப்புகழில் இடம்பெற வைத்துள்ளார் எனலாம்.

அடியவராதல் வேண்டும் என்று வேண்டி முன்னோர்களைப் பின்பற்றிக் கவியமைத்து இறையருள் பெற்ற அருணகிரியார் வரலாற்றினை உணரும்பொழுது மேலும் ஒரு சிறப்பு வெளிப்படுகிறது. திருமுறையாளர்கள் எவ்வாறு இறையருள் பெற்றிருந்தார்களோ அதுபோலவே அருணகிரியாரும் முருகனருள் பெற்றார் என்பதை உணரமுடிகிறது. திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனிடம் பொற்தாளம் பெற்றுச் சிறந்தது போல அருணகிரியாரும் முருகனிடம் ஜபமாலை பெற்றுத் திகழ்ந்தார். அப்பர் பெருமான் கடலைக் கடப்பதற்குக் கல் தெப்பமாயிற்று. எனவே நீர் என்ற பூதத்திலிருந்து அவர் தப்பிப்பதற்கு இறையருள் கிட்டியது. அதுபோல அருணகிரியாருக்கும் கோபுரத்திலிருந்து விழுந்தபோது பஞ்சபூதங்களில் ஒன்றான நிலத்தில் விழுந்து எவ்விதத் துன்பமும் இன்றி வாழ முருகனருள் கிட்டியது. அத்துடன் அப்பரடிகளைத் திருமறைக் காட்டிலிருந்து திருவாமூர்க்கு வா என்று சிவபெருமான் அழைத்ததுபோல அருணகிரியாரையும் முருகப் பெருமான் வயலூரிலிருந்து விராலிமலைக்கு வா என்று அழைத்தமை உணரப்பாற்று.

அப்பரும் சம்பந்தரும் படிக்காசு பெற்றதுபோல அருணகிரியாரும் முருகப் பெருமானிடம் படிக்காசு பெற்ற வரலாறு இடம் பெற்றுள்ளது. சோமாசிமாற நாயனாரது யாகத்தில் சுந்தரர் பெருமான் சிவபெருமானை வரவழைத்துக் காட்டியதுபோல அருணகிரியாரும் பிரபுட தேவ ராசாவுக்காக முருகப் பெருமானை வரவழைத்துக் காட்டினார். புத்தர்களை ஊமைகளாக்கி வாதில் வென்ற மணிவாசகரைப் போல அருணகிரியாரும் வில்லிபுத்தூராரை வாதில் அடக்கிய செய்தி பெறப்படுகிறது. குருந்த மரத்தடியில் மணிவாசகருக்குக் குருவடிவில் சிவன் அருள் உபதேசம் செய்ததைப் போல அருணகிரியாருக்கு முருகவேளின் உபதேசம் கிடைத்தது. இவ்வாறு அரனடியார்களையும் அருணகிரியாரையும் வாழ்வியல் நிகழ்ச்சிகளால் ஒப்பிட்டுக் காண்பது ஆன்றோர்களின் வழக்காகும். *(தணிகைமணி வ.சு. செங்கல்வராயப்பிள்ளை - அருணகிரிநாதர் வரலாறும் நூல் ஆராய்ச்சியும்)*

அருணகிரியாரின் பாடல்களை பயிலுகின்ற பொழுது சைவ நாயன்மார்களை அவர் போற்றிப் பரவிய பண்பினைத் தெள்ளிதின் உணரலாம். முருகன்தான் ஞானசம்பந்தராகத் தோன்றி அருளினார் என்பது அருணகிரியாரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். பல இடங்களில் இந்த நினைவோடு முருகனை அருணகிரியார் போற்றிப் புகழுகின்றார். ஞானசம்பந்தரின் பெருமைகளில் சமணர்களைக் கழுவேற்றிய நிகழ்ச்சியைப் பெரிதும் வலியுறுத்திச் சொல்லுவார்.

"பாலறா திருவாயால் ஓதிய
ஏடு நீர்க்கு எதிர்போயே வாதுசெய்
பாடல் தோற்று இருநாலாம் ஆயிரம் ...... சமண்மூடர்
பாரின் மேற்கழுமீதே ஏறிட
நீரிடாத் தமிழ் ஓடிஏறிட
பாதுகாத்து அருளாலே கூன்நிமிர் ...... இளையோனும்
ஞாலமேத்தியதோர் மாதேவியும்
ஆலவாய்ப் பதிவாழ் வா மாறெணு
ஞான பாக்கிய பாலா வேலவா மயில் ...... வீரா"

*(காலன் வேற்கணை - பூவாளூர் திருப்புகழ்)*

என்ற பாடல் பகுதியை இங்கு எடுத்துக்காட்டாக்கலாம். இந்நிகழ்வு மட்டும் அல்லாது ஞான சம்பந்தர் வாழ்வில் இடம்பெற்ற ஆண்பனையைப் பெண்பனையாக்கியது (பா. 775), எலும்பைப் பெண்ணாக்கியது (பா. 442), ஞானப்பால் உண்டது (பா. 429), நெருப்பில் இட்ட ஏடு பசுமையாய் நின்றது (பா. 558), முத்துச்சிவிகை பெற்றது (பா. 455) உள்ளிட்ட நிகழ்வுகளையும் அருணகிரியார் குறிப்பிடுகிறார். குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டும் அளவிற்கு நாவுக்கரசரைப் பற்றிய செய்திகள் இல்லை என்றாலும் அவருடைய தமக்கையார் திலகவதியாரைப் பற்றிய ஓர் குறிப்பை அருணகிரியார் திருப்புகழில் தந்துள்ளார். "சீதமதியம் எரிக்கும்" என்று தொடங்கும் திருவாமூர் திருப்புகழில் "மாதுபுகழை வளர்க்கும் திருவாமூர் வாழும் மயிலில் இருக்கும் குமரேசா" என்று போற்றுகிறார். திருவாமூர் மாது என்பதால் அது திலகவதியாரைத் தான் குறிக்கும் என்பதில் இருவேறு கருத்தில்லை.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றிய பல குறிப்புக்களை அருணகிரியார் தருகின்றார். "சுந்தரன் பந்தமும் வந்து அன்புடன் தொண்டன் என்று அன்றுகொண்டிடும் ஆதி" (பா. 755) என்று சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட செய்தியைச் சுட்டிக் காட்டுகிறார் அருணகிரியார். மேலும் பரவை நாச்சியாரிடம் தூது சென்றது (பா. 418), குண்டையூர் நெல் தந்தது (பா. 919), பொதிசோறு தந்தது (பா. 1087), சேரமான் பெருமாளோடு கயிலை சென்றது (பா. 871) ஆகியவைகளைக் கூறி, சுந்தரரின் செயல்களைப் போற்றுகிறார்.

மணிவாசகரைப் பற்றி அருணகிரிநாதர் குறிப்பிடும்பொழுது, "குருவின் உருவென அருள்செய் துறையினில் குதிரை கொளவரு நிறை தவசி தலைகொற்றப் பொற்பதம் வைத்து இட்ட அற்புதம்" என "மருவு கடல் முகில்" எனத் தொடங்கும் திருப்புகழில் இறைவன் குருவடிவாய் வந்து அருளிய திறத்தைக் குறிப்பிடுகிறார். இப்பகுதியில் மணிவாசகரின் திருமுடியில் திருவடு சூட்டி இறைவன் அருளிய திறம் பெரிதும் குறிப்பிடத் தக்கதாகும். "சீதவாசனை" என்று தொடங்கும் திருப்புகழில் "வாதவூரனை மதித்து ஒரு குருக்கள் என ஞாபனபாதம் வெளியிட்டு நரியின் குழுவை வாசியாம் என நடத்தும் அரச" என்று மணிவாசகருக்கு அருளிய திறத்தை அருணகிரியார் நினைவுகூர்ந்து போற்றுகிறார். இவ்வாறு நால்வரைப் பற்றி மட்டும் அல்லாத பிற அரனடியார்களையும் அருணகிரியார் நினைவு கூர்வது நினைக்கத் தக்கதாகும்.

சுந்தரர் பெருமான் பாடிய திருத்தொண்டத் தொகைக்குத் திருச்சிற்றம்பலவர் "தில்லைவாழ் அந்தனர்" என்று அடி எடுத்துக் கொடுத்தது மரபுவழிச் செய்தியாகும். அடியார்களில் முதன்மை பெற்றிருக்கும் அத்தில்லை அந்தணர் பெருமக்களை அருணகிரியார்,

"வேதநூல் முறை வழுவாமே தினம்
வேள்வியால் எழில் புனை முவாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை ...... புரி கோவே"

*(தாது மாமலர் - சிதம்பரம் திருப்புகழ்)*

எனக் குறிப்பிடுகிறார். வேதநெறியை வேள்விச் சடங்கை வழுவாமல் காத்து மேன்மை அடைந்தவர்கள் தில்லை முவாயிரவர் என்று அருணகிரியார் அவர்களைப் போற்றுவது நினைந்து மகிழத் தக்கதாகும். அடுத்து அடியார்கள் வரிசையில் அருணகிரியார் மனுநீதிச் சோழனை நினைவு கூர்கிறார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் அல்ல என்றாலும் சிவனடியார்களில் முதன்மை பெற்றவர் அவர் என்பதைத் திருப்புகழில் சிறப்புப் படுத்திக் காட்டுகிறார் அருணகிரியார். மணி ஒலி கேட்ட மனுநீதி வெளியில் வந்து மணியடித்த பசுவினைக் காணுகின்றான். இந்தக் காட்சியைக் கூறவந்த அருணகிரியார்,

"துணிவில் இதுபிழை பெரிதென வரும்மனு
உருகி அரகர சிவசிவ பெறுமதோர்
சுரபி அலமர விழிபுனல் பெருகிட ...... நடுவாகப்
பரவிய தனது துயர்கொடு நடவிய பழுதின்
மதலையை உடல்ஈறு பிளவொடு
படிய ரதமதை நடவிட மொழிபவன்"

*(கரமு முளரியின் - திருவாரூர் திருப்புகழ்)*

என்று குறிப்பிடுகிறார். இப்பகுதியில் வெளியில் வருகின்ற அரசன் "அரகர சிவசிவ" எனக் கூறிக்கொண்டே வருகிறான் என்று அருணகிரியார் குறிப்பிடுவது அவ்வரசனைச் சிறந்த சிவனடியாராகக் காட்டுவதற்காகவே எனலாம். நடுநிலை தவறாமல் இருப்பதற்காக இறைவனைப் பரவினான் என்றும் பாடலில் குறிப்பிடுவது அரசனின் பக்தி நெறியைக் காட்டுவதாகும்.

அடுத்து சிறுத்தொண்டரைப் பற்றிய ஒரு குறிப்பு "வங்கார மார்பில்" எனத் தொடங்கும் திருப்புகழில் உள்ளது.

"எண்தோளர் காதல்கொடு காதல்கறியே பருகு

செங்காடு மேவி பிரகாசமயில் மேல் அழகொடு

என்காதல் மாலைமுடி ஆறுமுகவா அமரர் ...... பெருமாளே"

*(வங்கார மார்பிலணி - திருச்செங்காட்டங்குடி திருப்புகழ்)*

இப்பகுதியில் காதல்கறி என்பது சீராளதேவனைக் குறிப்பதாகும். சிறுத்தொண்டர் பெயர் இடம் பெறவில்லை என்றாலும் இப்பாடல் பகுதி அவரின் அருந்தொண்டைக் குறிப்பிடுவது என்பதில் ஐயமில்லை. கண்ணப்பரைப் பற்றிய குறிப்பும் திருப்புகழில் காணப்படுகிறது.

" ...... புனல் வேடன்

பச்சிலைக்கும் வாய்க்குள் எச்சிலுக்கும் வீக்கு

பைச்சிலைக்கும் ஆட்கொள் ...... அரன்"

*(மச்ச மெச்சு - சிதம்பரம் திருப்புகழ்)*

என்று வேடர்பிரானாகிய கண்ணப்பரின் பச்சிலை பூசைக்கும், அவரின் எச்சிலுக்கும், அவர் கட்டியிருந்த வில்லுக்கும் விரும்பி ஆட்கொண்ட சிவபெருமான் என்று இப்பகுதில் அருணகிரியார் குறிப்பிட்டுக் கண்ணப்பரை நினைவு கூர்கிறார். இப்பகுதியில் திருநீறு இட்ட அந்தணராகிய சிவகோசரியாருக்கு அன்பு வழிபாடே சிறந்தது என்ற உண்மையைக் கண்ணப்பர் காட்டினார் என்றும் அருணகிரியார் குறிப்பிடுவது நனைவு கூரத் தக்கதாகும். மற்றோர் அடியவராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் திருவானைக்கா திருப்புகழில் அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

"செந்தமிழ்ப் பாணப் பாவலர் சங்கித யாழைப் பாடிய

தென்திருவானைக்காஉறை ...... பெருமாளே"

*(அம்புலி நீரை - திருவானைக்கா திருப்புகழ்)*

என்று குறிப்பிட்டு, செந்தமிழ்ப் புலமை உடைய திருநீலகண்ட யாழ்ப்பாணர் தன்னுடைய யாழாகிய கருவியை ஞானசம்பந்தர் பாடலுக்கு ஏற்ப வாசித்தார் என்று சிறப்பிக்கின்றார்.

இவ்வாறு முருகனுக்கு அடிமையான அருணகிரிப் பெருமான் அடியார்களின் சிறப்பையும் அவர்களின் ஒருவனாகத் தான் வாழவேண்டும் என்ற விருப்பத்தையும் குறிப்பிடுவதோடு முன்னர் வாழ்ந்த திருமுறையாளர்களின் நடையில் நின்றுயர் அடியவராய் விளங்கியும், அவர்தம் அருட் செயல்களைப் போலத் தம் அருட் செயல்களை நிகழ்த்தியும், நாயன்மார்களின் புகழ்சூழ் வரலாற்றைப் பதிவு செய்தும் புகழ் உச்சியில் விளங்குகிறார் எனலாம்.

*திருச்சிற்றம்பலம்.*